தொகுப்பு இல. 24 இதழ். 2

ஆனி 2026

# INFORMATION

கொழும்பு இறையியல் கல்லூரியின் செய்திமடல்













## கொழும்பு இறையியல் கல்லூரியின் புதிய அதிபரின் பணி பொறுப்பேற்பு நிகழ்வு

2026 பங்குனி 26 அன்று, கொழும்பு இறையியல் கல்லூரியின் சிற்றாலயத்தில் நடைபெற்ற விசேட ஆராதனையில், திரு. நத்தானியேல் சோமநாதன் கல்லூரியின் புதிய அதிபராக தனது பணியினை பொறுப்பேற்று கொண்டார். இந்நிகழ்வில் கல்லூரியின் தற்போதைய மற்றும் முன்னாள் செயற்குழு உறுப்பினர்கள், விரிவுரையாளர்கள், அலுவலக பணியாளர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், பங்காளர்கள் மற்றும் இலங்கை தேசிய கிறிஸ்தவ சபை (NCCSL), இலங்கை தேசிய சுவிசேஷ கூட்டணி (NCEASL) மற்றும் ஏனைய வேதாகம கல்லூரிகளின் பிரதிநிதிகள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

திரு. நத்தானியேல் 2019 முதல் கொழும்பு இறையியல் கல்லூரியின் கல்விப்பீட உறுப்பினராகவும், 2025-2026 காலப்பகுதியில் பிரதி அதிபராகவும் பணியாற்றியுள்ளார். இவர் அமெரிக்காவின் உவீட்டன் கல்லூரியின் பட்டதாரி என்பதுடன், தற்போது ஐக்கிய இராச்சியத்தின் பர்மிங்காம் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டத்தினை நிறைவேற்ற காத்திருக்கிறார்.

இவர் ஸ்கைலர் அவர்களை தனது வாழ்க்கைத்துணையாக கொண்டுள்ளார்; இத்தம்பதியினருக்கு மேவா என்ற பெண் குழந்தை உள்ளார்.

இப்பணிப்பொறுப்பேற்பு ஆராதனையில், அமெரிக்காவின் கோர்டன்-கன்வெல் இறையியல் கல்லூரியின் கௌரவ தலைவரும், கிறிஸ்தவ அறநெறியியலில் சிறப்பு மிக்க சிரேஷ்ட பேராசிரியருமான முனைவர் டெனிஸ் ஹோலிங்கர் தேவனுடைய செய்தியை பகிர்ந்து கொண்டார். அதனை தொடர்ந்து, அதிபர் பதவியிலிருந்து விடைபெறும் அதிபரான முனைவர் ஐவோ பூபாலன் கடவுளுக்கு நன்றி செலுத்தும் அறிக்கையினை வழங்கினார். அதன் பின்னர் கல்லூரி செயற்குழுவின் தலைவரான அதி வணக்கத்திற்குரிய பேராயர் திலோராஜ் கனகசபை அவர்கள் புதிய அதிபருக்கான பணிசார் பொறுப்புகளை வழங்கியதை தொடர்ந்து, கல்லூரியின் ஸ்தாபக தலைவரான அஜித் பெர்னாண்டோ அவர்கள் புதிய அதிபருக்கான பொறுப்பாணை ஜெபத்தை வழிநடத்தினார். இறுதியாக புதிய அதிபரின் ஏற்புரையுடன் நிகழ்வானது இனிதே நிறைவடைந்தது.

பணி பொறுப்பேற்பு ஆராதனை நிகழ்வினை காண்பதற்கு இங்கே அழுத்தவும் YouTube

### புதிய அதிபரின் செய்தி

## வலுவூட்டப்பட்ட தாழ்மை



**நத்தானியேல் சோமநாதன்**

தலைமைத்துவ மாற்றங்கள் குழப்பங்களுக்கும், திசைமாற்றங்களுக்கும், ஏன் சில நேரங்களில் போட்டி மனப்பான்மைக்கும் கூட வழிவகுக்கலாம். வேதாகமத்தில் சவுல் மற்றும் தாவீது இடையிலான நிகழ்வுகள் போன்ற பல உதாரணங்களை நாம் அறிவோம் என்பதால், இது நமக்கு ஒன்றும் புதிதல்ல.

இருப்பினும், கொழும்பு இறையியல் கல்லூரியை பொறுத்தவரை, நாம் கொண்டாடுவதற்கு பல விடயங்கள் உள்ளன என்று கூறுவதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். இந்த தலைமைத்துவ பொறுப்பேற்பானது இதில் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் தேவனை மகிமைப்படுத்துவதாகவும், கண்ணியமானதாகவும் அமைந்திருக்கிறது. நாம் கற்பனை செய்து பார்க்க முடியாத வழிகளில், தேவனின் கிருபையையும் தெய்வீக பராமரிப்பையும் இது வெளிப்படுத்தியிருப்பதற்காக நாம் நன்றி செலுத்துகிறோம்.

கடந்த பங்குனி 26 அன்று நடைபெற்ற புதிய அதிபரின் பணி பொறுப்பேற்பு ஆராதனையானது, நான் விவரித்த இந்த மாற்றத்தின் ஒரு சிறு பிரதிபலிப்பாக அமைந்தது. கொழும்பு இறையியல் கல்லூரியில் தேவன் இதுவரை செய்தவற்றுக்கான நன்றியுணர்வையும், எதிர்காலத்தில் அவர் செய்யப்போகும் காரியங்கள் குறித்த ஆர்வத்தையும் கலந்து அமைந்த ஓர் நெகிழ்ச்சியான ஆராதனையாக அது அமைந்திருந்தது. பல திருச்சபைகள் மற்றும் திருச்சபை பிரிவுகளின் தலைவர்கள், செயற்குழு உறுப்பினர்கள், விரிவுரையாளர்கள், மாணவர்கள்,

தொடர்ச்சி பக்கம் 2-ல்...



பக்கம் 1-ன் தொடர்ச்சி...

அலுவலக பணியாளர்கள் மற்றும் பங்காளர்கள் என பலரும் நேரில் மற்றும் நேரலை வழியாக இந்த ஆராதனையில் கலந்துகொண்டது ஒரு தனிச்சிறப்பாகும். கொழும்பு இறையியல் கல்லூரி திருச்சபைக்காகவும், உலகளாவிய அதன் திருத்தூதுப்பணிக்காகவும் அர்ப்பணிக்கப்பட்டுள்ளது என்பதை மீண்டும் உறுதிப்படுத்த இது ஓர் சிறந்த சந்தர்ப்பமாக அமைந்தது.

எனது இந்த சுமூகமான மற்றும் ஆத்மார்த்தமான பொறுப்பேற்பிற்கு, எனது முன்னோடியான முனைவர். ஐவோ பூபாலன் அவர்களுக்கு நான் மிகுந்த நன்றிக்கடன்பட்டுள்ளேன். முனைவர். பூபாலன் அவர்கள் தனது முன்மாதிரியான தலைமைத்துவத்தின் மூலம் நேர்மை மற்றும் தாழ்மையின் உயர் தரத்தை வெளிப்படுத்தியுள்ளார். கொழும்பு இறையியல் கல்லூரியின் அதிபராக 27 ஆண்டுகளுக்கும் மேலாக அவர் ஆற்றிய முன்மாதிரியான மற்றும் கனியுள்ள சேவையை முன்னிட்டு நாங்கள் அவரை வாழ்த்துகிறோம். கொழும்பு இறையியல் கல்லூரி குடும்பமாகிய எமக்கு, முனைவர் பூபாலன் அவர்களின் அடுத்தக்கட்ட ஊழியப்பயணமானது உள்ளூர் மற்றும் உலகளாவிய திருச்சபைக்கு இன்னும் பெரிய ஆசீர்வாதமாக அமையும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

கடந்த சித்திரை 1-ம் திகதியன்று நான் அதிபராக பொறுப்பேற்றேன். இப்பொறுப்பினை பற்றி நான் சிந்திக்கும்போதெல்லாம், நான் பொறுப்பேற்பதற்கு முன்பும் பின்பும், 1 கொரிந்தியர் 4-ம் அதிகாரம் அடிக்கடி என் நினைவுக்கு வந்தது. கொரிந்திய திருச்சபையினர் தலைவர்களை மையப்படுத்திய குழுக்களை உருவாக்குவதை நிறுத்துமாறு பவுல் வற்புறுத்திக்கூறும் நீண்ட வாதத்தின் ஒரு பகுதியாக இந்த அதிகாரம் அமைகிறது. தலைவர்களை எவ்வாறு பார்க்க வேண்டும் என்பதை பவுல் மறுவரையறை செய்கிறார் - அவர்கள் சுற்றி அணிதிரள வேண்டிய நபர்களோ அல்லது அவர்களை ஒரு பீடத்தில் வைத்து போற்றப்பட வேண்டிய பிரபலங்களோ அல்ல, மாறாக 'கிறிஸ்துவின் ஊழியக்காரராகவும் தேவனுடைய இரகசியங்களின் உக்கிராணக்காரராகவும்' (வசனம் 1) மட்டுமே பார்க்கப்பட வேண்டும். அதற்கு மேலாகவோ அல்லது குறைவாகவோ இல்லை. எனவே, பவுலை பொறுத்தவரை, தங்கள் தலைவர்களை குறித்து பெருமை பாராட்டும் கிறிஸ்தவர்கள், ஊழிய அழைப்பினை பொருட்படுத்தாமல் கிருபையின் ஒரே ஆதாரமாகிய கிறிஸ்துவில் தங்களுக்குள்ள ஐசுவரியத்தை பற்றிய தெளிவற்ற புரிதலையே வெளிப்படுத்துகிறார்கள்.

அனைத்தும் ஒரு ஈவாகும். எந்த ஒரு ஈவும் சுயமாக உருவானது அல்ல மாறாக, பெற்றுக்கொள்ளப்பட்டது என்பதை பவுல் தலைவர்களுக்கு நினைவூட்டுகிறார். கிறிஸ்தவர்கள் தங்களுக்கு பிடித்தமான நபர்களை அல்லது காரியங்களை விக்கிரகங்களாக மாற்றும்போது (வசனம் 7), அவர்கள் தேவனை மேன்மைப்படுத்துவதற்கு பதிலாக தங்களைத்தாமே பெருமை பாராட்டிக்கொள்கிறார்கள். தாழ்மையுடன் பெற்றுக்கொள்ளப்படாமல், தங்களுக்குரிய உரிமையாக கருதப்படும்போது, வரங்கள் விக்கிரகங்களாக மாறிவிடுகின்றன. மேன்மையை குறித்து பெருமை பாராட்டுவதற்கு பதிலாக, பவுல் அதற்கு நேர்மாறான முன்மாதிரியை தருகிறார் (வசனங்கள் 8-13).

கிறிஸ்துவில் அவர்கள் யார் என்பதை புரிந்துகொள்ள மற்றவர்களுக்கு உதவுவதே நற்செய்தியின் உண்மையான உக்கிராணத்துவமும், தலைமைத்துவத்தின் அழைப்புமாகும். அதாவது, தேவனுடைய இரகசியங்களை எவ்வித மத்தியஸ்தமும் இன்றி வெளிப்படுத்துவதன் மூலம் அனைவரும் கிறிஸ்துவில் மட்டுமே கிடைக்கக்கூடிய விடுதலை, பாதுகாப்பு மற்றும் தகுதியை கண்டுகொள்ள செய்வதே அதன் நோக்கமாகும். மற்றவர்கள் கிறிஸ்துவில் ஐசுவரியவான்களாக மாற வேண்டும் என்பதற்காக, தலைவன் தன்னை தாழ்த்தி இறுதி வரிசையில் நிற்பதை தேர்ந்தெடுக்கிறான். ஒரு தலைவன் சார்ந்திருத்தலை அல்ல, மாறாக வலுவூட்டலையே உருவாக்குகிறான்.

கொழும்பு இறையியல் கல்லூரியின் இந்த புதிய காலகட்டத்தில் சுவிசேஷப்பணியானது கல்லூரியினூடாக விரைவாக முன்னேறுவதற்கு, மக்களின் ஈவுகளுக்கு வலுவூட்டுவதும், வளங்களின் ஈவினை சரியாக நிர்வகிப்பதுமே எனது முக்கிய பணியாக கருதுகிறேன். திருச்சபை தொடர்ந்து பல்வேறு தேசிய மற்றும் திருச்சபை சார்ந்த நெருக்கடிகளை எதிர்கொண்டு வரும் நிலையில், கொழும்பு இறையியல் கல்லூரியானது திருச்சபைக்கு வழங்கக்கூடிய தனித்துவமான ஈவுகளை கொண்டுள்ளது என்பதை நான் உறுதியாக நம்புகிறேன். நாம் அதை செய்வதற்கு என்னோடு இணைந்து ஜெபிக்குமாறு உங்களை அழைக்கிறேன்.

தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

## எமது கல்லூரி சஞ்சிகையானது (JCTS) தற்போது Sri Lankan Journals Online (SLJOL) தளத்தில் கிடைக்கப்பெறுகிறது




கொழும்பு இறையியல் கல்லூரியானது தனது கொழும்பு இறையியல் கல்லூரி சஞ்சிகையின் (JCTS) 19-வது தொகுதியை Sri Lankan Journals Online தளத்தில் வெளியிட்டதன் மூலமாக மற்றுமொரு மைல்கல்லை எட்டியுள்ளது.

இலங்கையின் தேசிய அறிவியல் நூலகம் மற்றும் வள மையத்தால் நிர்வகிக்கப்படும் இத்தளமானது, தற்போது 173 சஞ்சிகைகள், 2,950 இதழ்கள் மற்றும் 25,163 கட்டுரைகளை கொண்டு, நாட்டின் மிக முக்கியமான அறிவார்ந்த வெளியீட்டுத்தளமாக தொடர்ந்து வளர்ந்து வருகிறது.

2001-ம் ஆண்டு முதல் ஏறத்தாழ ஆண்டுதோறும் வெளியிடப்படும் JCTS சஞ்சிகையானது, கல்லூரியின் கல்விப்பீட உறுப்பினர்கள் மற்றும் உலகெங்கிலும் உள்ள முன்னணி அறிஞர்களின் கட்டுரைகளை கொண்டு, ஆழ்ந்த இறையியல் சிந்தனைகளுக்கும் கல்விசார் புலமைக்கும் பெரும் பங்களிப்பை வழங்கி வருகிறது.

கொழும்பு இறையியல் கல்லூரியின் 19 தொகுதிகளையும் விரைவில் SLJOL தளத்தில் காண்பதற்கு நாங்கள் ஆவலுடன் எதிர்நோக்குகிறோம்.

SLJOL தளத்தினை அணுகுவதற்கு இங்கே அழுத்தவும்

## கல்விப்பீட செய்திகள்

### கௌரவிப்பு: முனைவர் மனோ இம்மானுவேல்

25 வருட சேவைக்காலத்தினை கொண்டாடுதல்



முனைவர் மனோ அவர்கள், 2001-ம் ஆண்டில் கொழும்பு இறையியல் கல்லூரியில் கணக்காளர் மற்றும் விரிவுரையாளராக இணைந்தார். விரைவில் அவர் கல்விப்பீடத்தின் ஒருங்கிணைப்பாளராக நியமிக்கப்பட்டதோடு, 2005-ம் ஆண்டில் கல்விப்பீடாதிபதியாகவும் பொறுப்பேற்றார். இப்பணியில் 14 ஆண்டுகாலம் சிறப்பாக செயலாற்றியதை தொடர்ந்து, அவர் தற்போது கல்வி மேம்பாட்டுத்துறை தலைவராக பணியாற்றி வருகின்றார். இப்பொறுப்பில், கல்லூரியின் கல்விப்பீடத்தின் மேம்பாடு மற்றும் கற்பித்தல் வளங்களை உருவாக்குவதில் அவர் அதிக கவனம் செலுத்தி வருகிறார். இவற்றுடன், அவர் ஒரு முழுநேர கல்விப்பீட உறுப்பினராக தனது கற்பித்தல் மற்றும் எழுத்துப்பணிகளையும் தொடர்ந்து ஆற்றி வருகின்றார்.

### ஆசிய இறையியல் ஆய்வு மையம் மற்றும் ஆசிய சுவிசேஷ இறையியல் சஞ்சிகை இணைந்து நடத்திய கருத்தரங்கத்தில் முதன்மை உரையாளராக முனைவர். ஐவோ பூபாலன்



சிரேஷ்ட விரிவுரையாளரும் முன்னாள் அதிபருமான முனைவர். ஐவோ பூபாலன், ஆசிய இறையியல் ஆய்வு மையம் மற்றும் ஆசிய இறையியல் சங்கத்தின் ஆசிய சுவிசேஷ இறையியல் சஞ்சிகை இணைந்து கடந்த மாசி மாதம் நடாத்திய கூட்டுக்கருத்தரங்கத்தில் முதன்மை உரையாளராக கலந்து சிறப்பித்தார்.




இக்கருத்தரங்கமானது 'உருவாக்கப்பட்டு அனுப்பப்பட்டவர்கள்' என்ற கருப்பொருளை மையமாக கொண்டிருந்தது. முனைவர். ஐவோ அவர்கள், "ஆசியாவில் முன்னோடி ஊழியங்களுக்கான தலைமைத்துவம்: ஒரு முன்மாதிரியாக பவுல்" மற்றும் "21-ம் நூற்றாண்டில் முதலாம் தலைமுறை கிறிஸ்தவத்தின் நிகழ்வுப்போக்கு: இறையியல் மற்றும் மேய்ப்பத்துவத்தின் மாறுத்தரம்" ஆகிய தலைப்புகளில் தனது சிறப்புரைகளை வழங்கினார்.

### கொழும்பு இறையியல் கல்லூரி தலைமையகத்தின் வருகைதரு விரிவுரையாளர்கள்

**முனைவர். கிரேஸ் அல்-ஸௌக்பி, (PhD)**



இலண்டன் இறையியல் கல்லூரியில் இறையியலில் முனைவர் பட்டம் பெற்ற பெத்லகேமை சேர்ந்த இறையியல் கல்வியாளரான இவர், "கலாச்சார கண்ணோட்டத்தில் திருத்தூதுப்பணியியல்" எனும் முதுமாணி பாடநெறியினை கற்பித்தார்.

**முனைவர். சூன் லீ சோ, (EdD)**



உளநல ஆலோசகர், மேற்பார்வையாளர், பயிற்சியாளர் மற்றும் சிங்கப்பூர் வேதாகம கல்லூரி ஆலோசனையியல் கல்லூரியினது வருகைதரு கல்விப்பீட உறுப்பினருமான இவர், "அதிர்ச்சி மற்றும் துஷ்பிரயோகம் சார்ந்த ஆற்றுப்பணி" எனும் குறுங்கால பாடநெறியினை கற்பித்தார்.

**முனைவர். டெனிஸ் பி. ஹோலிங்கர், (PhD)**

கோர்டன் - கன்வெல் இறையியல் கல்லூரியின் கௌரவ தலைவரும், கிறிஸ்தவ அறநெறியியலில் சிறப்புமிக்க சிரேஷ்ட பேராசிரியருமான இவர், "பாலியல் அறநெறி மற்றும் உயிரியல் மருத்துவ அறநெறியில் உள்ள சவால்கள்" எனும் முதுமாணி பாடநெறியினை கற்பித்தார்.



**முனைவர். பென்னட் லாரன்ஸ், (PhD)**

ஆசிய இறையியல் சங்கத்தின் இந்திய பிராந்திய செயலாளர் மற்றும் பிலிப்பைன்ஸின் இறையியலுக்கான ஆசிய பட்டதாரி கல்லூரியின் பட்டதாரியுமான இவர், "1 கொரிந்தியர்" எனும் முதுமாணி பாடநெறியினை கற்பித்தார்.



## வாழ்த்துக்கள்



உதவி கல்விப்பீடாதிபதியான ஜூலியன் தேவதாசன், கடந்த பங்குனி மாதம் தென்னாப்பிரிக்க இறையியல் கல்லூரியில் இறையியலுக்கான முதுமாணி பட்டத்தினை பெற்றுக்கொண்டார். தனது பட்டத்திற்காக அவர் சமர்ப்பித்த ஆய்வறிக்கையில், இலங்கையிலுள்ள முதலாம் தலைமுறை விசுவாசிகளுக்கான மேய்ப்பபத்துவ ஆற்றுப்பணி தொடர்பில் கவனம் செலுத்தியதுடன் ஆவிகளை பகுத்தறிதல் தொடர்பில் விரிவாக ஆய்வு செய்திருந்தார்.

தொடர்ந்து வைகாசி மாதத்தில், தென்னாப்பிரிக்காவின் "கிறிஸ்தவ சமய பணியாளர்கள் சங்கம்" (ACRP) மற்றும் "மேய்ப்பபத்துவ மற்றும் ஆவிக்குரிய ஆலோசனையாளர்களுக்கான சபை" (CPSC) ஆகியவற்றின் அங்கீகாரத்துடன், "கிறிஸ்தவ மேய்ப்பபத்துவ ஆற்றுப்பணியில் சமயம்சார் நிபுணர்" என்ற சான்றிதழை பெற்றுக்கொண்டார்.



விரிவுரையாளரும், வட மத்திய மாகாண கல்வி நிலையத்தின் ஒருங்கிணைப்பாளருமான திலீப் குணவீர, 2025 கார்த்திகை மாதம் இலங்கையின் தேசிய சமூக மேம்பாட்டு நிறுவனத்தில் சமூகப்பணிக்கான முதுமாணி பட்டத்தை வெற்றிகரமாக பெற்றுக்கொண்டார். கிராமப்புற கல்வியில் சமூக ஊடக பயன்பாட்டின் தாக்கம் குறித்து இவரது ஆய்வறிக்கை அமைந்திருந்தது. மேலும், இவர் கொழும்பு இறையியல் கல்லூரியின் பட்டதாரி (BTh '13) என்பதும் குறிப்பிடத்தக்கது.

---

### அலுவலக பணியாளர்



வட கொழும்பு கல்வி நிலையத்தின் நிர்வாக அதிகாரியான பிரஷாந்தி பர்னாந்து, கடந்த பங்குனி மாதம் நிறுவன தலைமைத்துவத்தில் முதுமாணி பட்டத்தை பெற்றுக்கொண்டார். இதனை இலங்கை வேதாகம கல்லூரியுடன் இணைந்து DAI லங்கா நிறுவனம் வழங்கி இருந்தது.

### செயற்குழு

#### பிரஷான் டி மெல் அல்.'.பா ஸ்ரீலங்கா அமைப்பின் நாட்டிற்கான பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.



கொழும்பு இறையியல் கல்லூரி செயற்குழுவின் பொருளாளரான பிரஷான் டி மெல், அல்.'.பா ஸ்ரீலங்கா அமைப்பின் நாட்டிற்கான பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். அல்.'.பா பாடநெறி என்பது கிறிஸ்தவ விசுவாசத்தின் அடிப்படைகளை, நெகிழ்வான மற்றும் எவ்வித விமர்சனங்களும் அற்ற சூழலில் கலந்துரையாடல் மூலம் விளக்கும் ஓர் உலகளாவிய ரீதியிலான தொடர் அமர்வுகள் ஆகும். முற்றிலும் இலவசமான இப்பாடநெறியானது, குறிப்பாக எதையும் சந்தேகத்துடன் பார்ப்பவர்கள், புதிய விசுவாசிகள் மற்றும் ஆன்மீகம் அல்லது வாழ்க்கையின் அர்த்தம் குறித்து அறிய ஆர்வமுள்ள எவருக்கும் ஏற்ற வகையில் விசேடமாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

#### ரொஷான் மெண்டிஸ் மீகா குளோபலின் உலகளாவிய பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்



கொழும்பு இறையியல் கல்லூரி செயற்குழுவின் உறுப்பினரான ரொஷான் மெண்டிஸ், இந்த வருட ஆரம்பத்தில் மீகா குளோபல் (Micha Global) அமைப்பின் உலகளாவிய பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். மீகா குளோபல் என்பது, மனிதாபிமான உதவிகள், சமூக மேம்பாடு, படைப்பு பாதுகாப்பு மற்றும் சமூக நீதிக்கான முன்னெடுப்புகள் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள கிறிஸ்தவர்களின் சர்வதேச வலையமைக்காகும்.

## யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு வாலிபர் ஊழிய தலைவர் தனது கதையை பகிர்கிறார்...

இலங்கையின் வடமாகாணத்தில் போருக்கு பிந்தைய சூழலில் பிறந்த நான், வடுக்களுக்கு மத்தியிலே வளர்ந்தேன். ஆனால், தெய்வீகமான அழைப்பாலும் ஆவிக்குரிய உருவாக்கத்தாலும், எனது பாதை கொழும்பு இறையியல் கல்லூரிக்கு வழிநடத்தியது. அங்கு எனது சிதைந்த ஆரம்பங்கள், நம்பிக்கையூட்டும் ஓர் ஊழியமாக மாற்றப்பட்டன. கடவுள் இன்னும் பேசுகிறாரா, இன்னும் அனுப்புகிறாரா, இன்னும் மறுரூபமாக்குகிறாரா என்று சிந்திப்பவர்களுக்கு, எனது வாழ்க்கை ஒரு கலங்கரை விளக்கமாக மாறியுள்ளது.

2018-ல், நான் கொழும்பு இறையியல் கல்லூரியில் இறையியலில் டிப்ளோமா மாணவியாக அனுமதிக்கப்பட்டேன். கொழும்பு இறையியல் கல்லூரி என்பது வெறுமனே பட்டங்களை வழங்குவது மட்டுமல்ல, அது தனிநபர் உருவாக்கத்தை பற்றியது என்பதை நான் விரைவில் உணர்ந்துகொண்டேன். ஆரம்பத்திலிருந்தே, வழிபாடு, சமூக வாழ்க்கை, ஆழமான இறையியல் தேடல் மற்றும் சுயசிந்தனை போன்ற தெய்வீக வழியிலான சீரான ஆன்மீக நடைமுறைகளை நான் அறிந்துகொண்டேன். அது எனது முழு அடையாளத்தையும் மறுவடிவமைத்த ஒரு மாற்றத்தின் ஆரம்பமாக இருந்தது.

(அவர் 2025-ல் நடைபெற்ற பொறுப்பாணை மற்றும் நன்றி செலுத்துதலுக்கான பட்டமளிப்பு விழாவில் தனது இறையியலில் டிப்ளோமா பட்டத்தினை பெற்றார்)

பல ஆண்டுகளாக மாணவர்கள் தொடர்ச்சியான இறையியல் கல்வியில் ஈடுபடும்போது, குறிப்பாக முதன்முறையாக கல்வி கற்கும்போது, இத்தகைய மாற்றத்தின் பல கதைகளை நாங்கள் கேட்டுள்ளோம். ஒவ்வொரு விசுவாசியும் இத்தகைய கல்வியையும் ஆவிக்குரிய உருவாக்கத்தையும் பெற்று, திருச்சபையிலோ, வணிக உலகிலோ அல்லது வீட்டிலோ, கடவுள் அவர்களை எங்கு நிலைநிறுத்தியுள்ளாரோ அங்கு தங்களால் இயன்ற சிறந்த முறையில் கடவுளுக்கு சேவை செய்ய முழுமையாக தகுதி பெற வேண்டும் என்பதே எங்கள் ஜெபமாகும்.

இலங்கையிலுள்ள பல ஆர்வமுள்ள மாணவர்கள் நிதி ரீதியான சிக்கல்களால் இறையியல் கல்வியினை தொடர முடியாமல் சிரமப்படுகிறார்கள்.

### அதற்கான ஒரு வழியை இன்றே உருவாக்குங்கள்!

கொழும்பு இறையியல் கல்லூரியின் புலமைபரிசில் திட்டத்திற்கு நீங்கள் வழங்கும் தாராளமான நன்கொடை, விசுவாசிகளை தாக்கமுள்ள கிறிஸ்தவ சேவைக்காக தொடர்ந்து தயார்படுத்த கொழும்பு இறையியல் கல்லூரியிற்கு உதவும்.

நீங்கள் மாற்றத்தினை ஏற்படுத்தக்கூடிய வழிகள்:

- கொழும்பு இறையியல் கல்லூரியின் புலமைப்பரிசில் திட்டத்திற்கு மாதாந்தம் அல்லது காலாண்டு அடிப்படையில் தொடர் பங்களிப்பினை வழங்க முடியும்.
- ஒரே தடவையில் நன்கொடை வழங்க முடியும்.

### உங்களுடைய அன்பளிப்புகளை பின்வரும் வழிகளில் வழங்கலாம்.

வங்கிப்பரிமாற்றம்.˙.நேரடி பணவைப்பு

- வங்கி : ஹட்டன் நஷனல் வங்கி (கொஹுவலை கிளை)
- கணக்கு இலக்கத்தின் பெயர் : Colombo Theological Seminary (Pvt) Ltd
- கணக்கு இலக்கம் : 129010017539
- SWIFT Code : HBLILKLXOO1
- குறிப்பு : உங்கள் பெயர் - நன்கொடை உறுதிமொழி

*வங்கிக்கூடாக நேரடியாக பணப்பரிமாற்றம் செய்திருப்பின், அது பற்றிய விபரத்தினை *rochelle@cts.lk* என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அறிவிக்கவும்

காசோலை

- Colombo Theological Seminary (Pvt) Ltd (கணக்கிற்கு செலுத்தவும் என குறுக்கு கோடிடவும்) என பெயரிடவும்.
- அதிபர், கொழும்பு இறையியல் கல்லூரி, 189, துட்டுகெமுனு வீதி, கொஹுவலை, இலங்கை என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

*உங்கள் அன்பளிப்புக்களை நன்றியுடன் பெற்றுக்கொண்டமைக்கான உத்தியோகபூர்வ பற்றுச்சீட்டினை நீங்கள் பெற்றுக்கொள்ள முடியும்.

மேலதிக விபரங்களுக்கு வள மேம்பாட்டு முகாமையாளர், ரொஷல் ஹேக்கல்-ரணசிங்கவை தொடர்பு கொள்ளவும்.
+94 77 350 2930 | rochelle@cts.lk







